[திரு. எஸ். ரகுபதி] [2018 மார்ச் 19

திருமயம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள ஆயிரக்கணக்கானவர்களுக்கு நியாய விலை அட்டை வழங்க போதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். திருமயம் சட்டமன்றத் தொகுதியில் தமிழக அரசின் முதியோர் உதவித் தொகையினை ஏற்கெனவே வழங்கப்பட்ட அனைவருக்கும் மீண்டும் வழங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சட்டமன்றத் தொகுதியில் மனு செய்து ரேஷன் அட்டை கிடைக்கப் பெறாதவர்களுக்கு ரேஷன் அட்டை கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். திருமயத்திலிருந்து சென்னைக்கு நேரடியாக இயங்கிவந்த அரசுப் பேருந்தினை மீண்டும் இயக்க வேண்டும்.

பொன்னமராவதி வீட்டு வசதி வாரிய குடியிருப்புப் பகுதியில் சாலை வசதி, குடிநீர் வசதி, மின் வசதி போன்றவற்றை பொன்னமராவதி பேரூராட்சி நிருவாகம் ஏற்பாடு செய்ய உரிய நடவடிக்கையினை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை 20–3–2018 (செவ்வாய்க்கிழமை), காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3–36 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

–ஏதுமில்லை–

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

14. 2018–2019 ஆம் ஆண்டிற்கான விரிவான மானியக் கோரிக்கை எண்கள் 1 முதல் 54 வரை மற்றும் வரவு–செலவுத் திட்ட வெளியீடு எண்கள் 56 முதல் 59 வரை (58 புத்தகங்கள்).

15. 2018–2019 ஆம் ஆண்டிற்கான வருவாய் குறித்த விரிவான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகள்.

16. 2018–2019 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை.

2018 மார்ச் 19]

17. 2018–2019 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பு–பகுதி–I.

18. 2018–2019 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பு–பகுதி–II.

19. 2018–2019 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பின் இணைப்புகள்.

20. 2018–2019 ஆம் ஆண்டிற்கான நலத் திட்டச் செலவினங்கள் குறித்த அறிக்கை.

21. 2018–2019 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு புதுமை முயற்சிகளின்கீழ் புதிய திட்டங்களின் பட்டியல் (பகுதி–II திட்டங்கள்).

22. 2018–2019 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட உரையின் இணைப்புகள்.

23. வரவு–செலவுத் திட்ட விளக்க நூல், *2018–2019.*

24. 2018–2019 ஆம் ஆண்டு செலவுக்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு.

25. 2018–2019 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை குறித்து மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், துணை முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

26. அரசு உறுதிமொழிக் குழுவின் மூன்றாவது அறிக்கை. (*2016–2018*)

27. அரசு உறுதிமொழிக் குழுவின் நான்காவது அறிக்கை. (*2016–2018*)

- - -